விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 144 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 28 சனிக்கிழமை (11.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கு - கிழக்கில்
# இந்தியா அபிவிருத்தியை தொடர்ந்து முன்னெடுக்கும்
### சிறீதரனிடம் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் இந்தியா தொடர்ந்து அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா சிறீதரன் எம்.பியிடம் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

செல்வச்சந்நிதியின்
## பிரதம பூசகர் காலமானார்



04

சுற்றுலா விசாவில்
## வெளிநாட்டு வேலைக்கு செல்லாதீர்
### மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் தொழில் வாய்ப்புக்காக ஒரு போதும் வெளிநாடு களுக்கு செல்ல வேண்டாமென, இலங்கை வெளி 15

உடுத்துறை வடக்கு, தாளையடியில்
## துணியினால் கழுத்தை நெரித்து குடும்பப் பெண் கொலை

(கரணவாய்)

துணியினால் கழுத்து நெரிக்கப்பட்டு மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் உடுத்துறை வடக்கு, தாளையடிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ஜெகசீலன் சங்கீதா (வயது- 44) என்பவரே உயிரிழந்தவராவார். 15

## சிறந்த ஆட்சி, நிர்வாகத்துக்கு வெளிப்படைத்தன்மை அவசியம்
### மத்திய வங்கி ஆளுநரிடம் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

சிறந்த ஆட்சி, நிர்வாகத் துக்கு வெளிப்படைத்தன்மை அவசியம் என மத்திய வங்கி ஆளுநரிடம் அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

2023ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80ஆம் பிரிவின்படி 2023ஆம் ஆண்டுக்கான பொருளாதார மீளாய்வு அறிக்கை மற்றும் 99ஆம் பிரிவின்படி கடந்த ஆண்டுக்கான மத்திய வங்கியின் நிதியியல 15

## வவுனியாவில் பரீட்சை மேற்பார்வையாளர் இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியாவில் பாடசாலை ஒன்றில் பரீட்சை நேரம் முடிவடைவற்கு முன்னதாக மாணவர்களிடம் இருந்து விடைத் தாள்களை பெற்றுக் கொண்டமை தொடர்பில் பரீட்சை மேற்பார்வை 15

கடுமையான வெப்பம்
## அல்வாய் கிழக்கில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடும் வெப்பம் காரணமாக நிலத்தில் விழுந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் அல்வாய் கிழக்குப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் கோபாலகுலசிங்கம் 15

## பரீட்சை இடைவேளையில் மாணவர்கள் மோதல்
### வவுனியா நகர்ப்பகுதியில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் இருபாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் கடுமையாக மோதிக்கொண்டனர்.

குறித்த சம்பவம் வவுனியா குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள க.பொ.த சாதாரண தர பரீட்சை நிலையத்திற்கு முன்பாக நேற்று மதியம் இடம் பெற்றது.

நேற்று குறித்த 15

## உரிய தீர்வு தராவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை
### கிராம உத்தியோகத்தர்கள் சங்கம்

(கொழும்பு)

தமது பிரச்சினைக்கான உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் நாட்களில் தங்களது சேவைகளில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தேசிய அமைப்பாளர் நெவில் 15

## பசு வதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழில் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் பசு வதைக்கு எதிர்ப்புத் 15

## புன்னாலைக்கட்டுவனில் மின்கம்பத்தில் மோதி ஒருவர் பலி
### மோ.சைக்கிளை பொலிஸார் உதைத்து வீழ்த்தியதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனில் மின் கம்பத்தில் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிளை பொலிஸார் உதைத்து வீழ்த்தியதில் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்தார் என பொதுமக்கள் குற் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றின்றி காக்கும் உங்கள் நாளிதழ்

தில்லையம்பதியாள் துணை

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## நாற்பத்தொன்பதாவது ஆண்டு

## வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா - 2024

12.05.2024 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
14.05.2024 செவ்வாய் இரவு 8.30 மணிக்கு அன்னசப்பறம்
16.05.2024 வியாழன் இரவு 8.30 மணிக்கு பூச்சப்பறம்
17.05.2024 வெள்ளி இரவு 7.00 மணிக்கு வசந்தோற்சவம்
18.05.2024 சனி இரவு 8.30 மணிக்கு கைலாசவாகனம்
21.05.2024 செவ்வாய் பிற்பகல் 2.00 மணிக்கு வேட்டைத் திருவிழா (ஸ்ரீஞான வைரவர் ஆலயம்)
21.05.2024 செவ்வாய் இரவு 8.30 மணிக்கு சப்பறத் திருவிழா
22.05.2024 புதன் முற்பகல் 10.00 மணிக்கு ரதோற்சவம்
23.05.2024 வியாழன் முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
23.05.2024 வியாழன் இரவு 7.30 மணிக்கு கொடியிறக்கம்
24.05.2024 வெள்ளி இரவு 8.00 மணிக்கு பூங்காவனம்
25.05.2024 சனி காலை 6.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்
25.05.2024 சனி இரவு 7.00 மணிக்கு வயிரவர் மடை
10.06.2024 திங்கள் பிற்பகல் 3.00 மணிக்கு வருடாந்த வைகாசி பொங்கல் விழா



### தினசரி உற்சவம்

காலை 7.30 மணிக்கு அபிஷேகம், முற்பகல் 9.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, முற்பகல் 9.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, முற்பகல் 11.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி, மாலை 5.00 மணிக்கு சாயரட்சை பூஜை, மாலை 5.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, மாலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை, இரவு 8.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி

(C-0330)

**மஹோற்சவ பிரதமகுரு**
வேதஞானசுரபி தற்புருஷசிவம்
சிவப்பிரம்மஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வர சிவாச்சாரியார்
(ஊரெழு மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்)

**திருக்கோயில் பிரதமகுரு**
"ஆகம கலாசூரி" "சத்ஜோயாதசிவம்"
சிவப்பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சுஜேந்திர சிவாச்சாரியார்
(தில்லையம்பதி)

**மங்கள வாத்தியம்**
சிவதாஸ் குழுவினர்
(இனுவில்)

மஹோற்சவ காலங்களில் தினமும் அன்னதானம் இடம்பெறும்

ஈழத்து தில்லையம்பதி "ஈழத்து தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்" திருக்கோயில் பரிபாலன சபை


## மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 01 . 1948

மறைவு
08 . 05 . 2024

## கதிர்காமத்தம்பி குணமணி

அல்லையம்பதி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி குணமணி அவர்கள் (08.05.2024) கடந்த புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் கதிர்காமத்தம்பி(ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணரத்தினம், குணேஸ்வரி, குணநேசம், குணசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பிரபாகரன்(கனடா), ஜெயமதி, காலஞ்சென்ற கருணாகரன், ஜெயந்தினி(ஆசிரியர் - புனிதநகர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராதிகா(கனடா), நந்தகுமார்(சிவா - தர்மிதன் ஸ்டோர் உரிமையாளர்), பிரசாந்(வேலவன் கால்நடைத் தீவனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்மிதன், ஹரினி, அபிஷேக், ஆஹாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.05.2024) சனிக்கிழமை பிற்பகல் 03.00 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி காலை 08.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


அல்லையம்பதி,
துன்னாலை, கரவெட்டி.

077 918 4507
076 923 8005

(C-0332)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 04 . 1938

மறைவு
06 . 05 . 2024

## சுப்பிரமணியம் இராசேந்திரம்

யாழ்ப்பாணம், வடமராட்சி, மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசேந்திரம் அவர்கள் 06.05.2024 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சுந்தரம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருக்கேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென் றவர்களான இராசமாணிக்கம், நாகரத்தினம், பாலகிருஷ்ணன், நமசிவாயம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரசாத் (லண்டன்), காண்டீபன், சோபிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாதேவன் (லண்டன்), நேமினா (லண்டன்), க.சுந்திரதாஸ், க.ரகு (இலண்டன்), டெ.சாவித்திரி, மு.ஜெயமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்வினி, கிசோர், சூதீப், நவீயா, உருத்திரேஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளையதினம் ஞாயிற்றுக்கிழமை 12.05.2024 காலை 08.00 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின் றோம்.

மாதனை,
பருத்தித்துறை.

(C-0335)

077 224 7874


தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். துரைச்சாமி சையோகநாதன்

(உரிமையாளர்-வில்லவையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம்)
திதி(வளர்பிறை சதுர்த்தி)



மண்ணில்-01.08.1950 விண்ணில்-26.04.2020

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்-அப்பா
ஆண்டு நான்கு ஆனாலும்
உம் நினைவுகள் அழியவில்லை-அப்பா
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் எம்முடன் இருப்பீர்கள்-அப்பா

(0053)


76/5 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
T.P-077 3126 909

# மரண அறிவித்தல்

பிறப்பு-1945.08.16 இறப்பு-2024.05.08

## அமரர்.திருமதி. ஜெயரட்ணம் குலநாயகி



யாழ்.அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட ஜெயரட்ணம் குலநாயகி அவர்கள் கடந்த 08.05.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார்,காலஞ்சென்ற கிருஷ்ணசாமி- பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா- மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தையா ஜெயரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மதேவி,சடாட்சரம், அருணகிரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயலக்ஷ்மி (லண்டன்), ஜெயரஞ்சன்(லண்டன்), ஜெயசங்கர்(சுவிஸ்),ஜெயந்தி(சூட்டி- சுவிஸ்), ஜெயசுதா(சுவிஸ்), ஜெயகௌரி(ஜேர்மனி), ஜெயசித்ரா(கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணபதிப்பிள்ளை, சூரியகுமார், ஞானமொழி(கீதா), மோகனசர்மா ஜெயரூபன், சிறீதாசன், அனுஷன் ஆகி யோரின் அன்பு மாமியாரும்,ஜென்சிகா, நிரூபன், ஜெஜீவன், அஜீனா, ஜெனிஸ், உமாசுத சர்மா, சுபாஸ்கான், சகானா, ஜெனீஷா, சுபிட்சனா, சுகிர்தன், சகீரா, ஜெலினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.05.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 08.00 மணிமுதல் மு.ப 10.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அளவெட்டி வடக்கு மணல்பிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பண்டத்தரிப்பு,தெல்லிப்பழை வீதி,
பன்னாலை.

தகவல்- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்திடம் வாங்கிக் கட்டியது சென்னை

சுப்மன் கில், சாய் சுதர்சன் சதம் கைகொடுக்க, குஜராத் 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாத்தின் மோடி மைதானத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல்., போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை - குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில்வென்ற சென்னை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

**நிதான துவக்கம்**

குஜராத் அணிக்கு சுப்மன் கில், சாய் சுதர்சன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. சான்ட்னர் வீசிய முதல் ஓவரில் சுப்மன் 4, 6 என அடித்தார். ஷர்துல், தேஷ் பாண்டே பந்துகளை சுதர்சன் சிக்சருக்கு அனுப்பிய போதும் முதல் 5 ஓவரில் குஜராத் 46/0 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் பின் இருவரும் மின்னல் வேக ஓட்டக் குவிப்பை வெளிப்படுத்தினர்.

**இரண்டு சதம்**

ஜடேஜா ஓவரில் (9வது) சுதர்சன் 4, 6 என விளாச, குஜராத் அணி 10 ஓவர்களில் 107/0 ஓட்டங்கள் சேர்த்தது. சிமர்ஜீத் வீசிய 11வது ஓவரில் சுப்மன் 6, 4 ஓட்டங்கள், சுதர்சன் தன் பங்கிற்கு 6, 6 ஓட்டங்கள் என அடிக்க மொத்தம் 23 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. அடுத்து சான்ட்னர் பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு அனுப்பி மிரட்டினார் சுதர்சன்.

மிட்செல் வீசிய போட்டியின் 14வது ஓவரில் மூன்று சிக்சர் அடித்தார் சுப்மன். சிமர்ஜீத் பந்தில் பவுண்டரி அடித்த சுப்மன், 50 வது பந்தில் சதம் எட்டினார். இதே ஓவரின் கடைசி பந்தில் சிக்சர் அடித்த சுதர்சன், 52வது பந்தில் சதம் கடந்தார். முதல் விக்கெட்டுக்கு 210 ஓட்டங்கள் சேர்த்த போது, தேஷ்பாண்டே வீசிய 17 வது ஓவரில் சுதர்சன் (103), சுப்மன் (104) என இருவரும் ஆட்டமிழந்தனர். குஜராத் அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்கள் குவித்தது.

சென்னை அணியை ஆரம்பத்தில் ரச்சின் (1), ரகானே (1), ருதுராஜ் (0) ஏமாற்றினர். மிட்செல் (63), மொயீன் அலி (56) அரைசதம் அடித்து கிளம்பினர். துபே (21), ஜடேஜா (18) நிலைக்கவில்லை. சென்னை அணி 20 ஓவரில் 196/8 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. தோனி (26) ஆட்டமிழக்காமல் இருந்தார்.


## சிங்காரவேலன் சிவகாஜத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை பூஜை

நேசம் நிறைந்த நெஞ்சத்தீர்!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சிவகாஜத்ரி சந்நிதானத்தில் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் இறந்த மக்களினதும் உபயகாரரினது தாய், தந்தையரின் ஆத்ம சாந்தி பூஜை இன்று சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**உற்சவ விபரம்**
**கும்ப பூஜை - மு.ப 9.00**
**மூலஸ்தான பூஜை - மு.ப 10.30**

தொடர்ந்து உபயகாரரது தாய், தந்தையரினதும் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் இறந்த மக்களினதும் ஆத்ம சாந்திக்காக பூஜை வழிபாடுகள் நடைபெறும். மு.ப 11.00 மணி தொடக்கம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு தொடர்ந்து மகேஸ்வர பூஜை (அன்னதானம்) அடியவர்களுக்கு வழங்கப்படும். குறித்த வழிபாட்டிலே கலந்து கொண்டு முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்தில் இறந்த மக்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

'தெளிவேயெஞ் சிந்தனையுள்'

**உபயம்**
**திரு.திருமதி சுதர்ஷன் கீதா**
**குடும்பத்தினர் (UK)** (C-0336)

**இங்ஙனம்**
**கலாநிதி ராஜஸ்ரீ**
**சிவகமல்ராஜ் குடும்பம்**



## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (G.G.பொன்னம்பலம் வீதி), பலாலி வீதியில் இருந்து 200 m தூரத்தில் 3ஆவது காணி 27 பரப்பு தோட்டக் காணி 5 அரை வீட்டு அத்திவாரத்துடன் விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை** (722)

தொடர்பு கொள்ள வேண்டிய இல.

**076 877 5021**


## பிரதம...

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் பிரதம பூசகர்களுள் ஒருவரான சிவத்திரு.விசாகரத்தின ஐயர் தெய்வேந்திரம் ஐயர் நேற்று காலமானார்

அவரது இறுதி கிரியைகள் இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளது. (ம-7,10)


## பசுக்கொலைக்கு எதிரான போராட்டம்


| | | |
|---|---|---|
| இடம் | : | நல்லை ஆதீனம் முன்பாக |
| காலம் | : | 12.05.2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணி |
| தலைமை | : | மூதறிஞர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் |

*இந்துக்களே விழித்தெழுங்கள்*
*இந்து அமைப்புக்களே!*
*போராட்டத்தில் இணைந்து*
*கொள்ளுங்கள்*

(C-0337)

**இலங்கை சிவசேனை சிவத்தொண்டர்கள்**


## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.06.1962

மறைவு 04.05.2022

அமரர்

## கதிரவேலு ஆனந்தசோதி

ஓரிரண்டு ஆண்டுகள் ஆனதப்பா உங்கள் குரல் கேட்டு!
இனி எங்கு காண்போம் அப்பா உங்களின் அந்த தோரணையை
நீங்கள் இல்லாத வீடும் நீங்கள் இல்லாத சபையும்
கூறும் உங்கள் தனித்துவத்தை
இறுதி மூச்சு உள்ளவரை எமக்காய் இருந்த எம்
அப்பா எம்மூச்சில் கலந்து இன்று வருடங்கள் இரண்டு

மஞ்சத்தடி தெற்கு,
இணுவில். (0055)


தகவல் -
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

திரு.

## விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர்

(பிரதம குரு - செல்வச்சந்நிதி தொண்டைமானாறு)



திரு.வி.தெய்வேந்திரஜயர் (பிரதம குரு) அவர்கள் நேற்று (10.05.2024) வெள்ளிக்கிழமை அன்று முருகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவத்திரு.செல்லையா - விசாகரத்தின ஐயர் (பிரதம குரு) - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திரு.ஆறுமுகசாமி ஐயர் (பிரதம குரு) - வேதநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் திருமதி மகேந்திரராணி, ஜெயந்திரன், சசீந்திரன், ரவீந்திரன், காலஞ்சென்ற துஷியேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிறிரஞ்சன், சசிகலா, ஜெயந்தாதேவி, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிலன், லோகஜன், கணேந்திரன், ஹரேந்திரன், யுகேந்திரன், வைஸ்ணவி, மயூரதி, தீபிகா, சுதர்சினி, கிருஸ்ணேந்திரன், சிவனேந்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற நாகேந்திரன், காலஞ்சென்ற திருமதி கு.தேவாம்பிகை, இராஜேந்திரம், பா.விமலாம்பிகை, விஜேந்திரன், யோகேந்திரன், காலஞ்சென்ற லோகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு. ஆறுமுகசாமி ஐயர், திரு.சிவசண்முக ஐயர் (பிரதம குரு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (11.05.2024) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:-
திரு.தெய்வேந்திர ஐயர் சசீந்திர ஐயர்
[illegible]

(721)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025

## தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்



சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட துலாம் ராசி அன்பர்களே!

நீங்கள் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள். **கிரகநிலை:** சப்தம ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஆயுள் ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது விரைய ஸ்தானம் - தனவாக்கு ஸ்தானம் - சுக ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருடம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி 01.05. 2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 28.22 இற்கு - மாலை 05.01 இற்கு துலாம் லக்னத்தில் குருபகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

**துலாம் ராசியினருக்கான குரு பெயர் ச்சி பலன்கள்:** இந்த குரு பெயர்ச்சியில் சமூகத்தில் உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். உங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்த நண்பர்கள் மனம் மாறி மீண்டும் நட்புடன் பழகத் தொடங்குவார்கள். கடினமான காரியங்களையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். உங்களிடம் கடன் வாங்கியவர்கள் குறித்த நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவார்கள். வசதி படைத்தவர்கள் உங்களின் நண்பர்கள் ஆவார்கள். உங்களின் எளிமையான பேச்சினால் அனைவரையும் கவர்வீர்கள். சமூகத்தில் உங்களின் பெயரும், புகழும் படிப்படியாக உயரும். சிலருக்கு வெளியூர், வெளிநாட்டிற்கு சென்று வசிக்கும் வாய்ப்புகளும் கிடைக்கும். புதிய சூழ்நிலைகளில் வாழ உங்களைத் தயார்படுத்திக்கொள்வீர்கள்.

தொழிலாளர்களுக்கு சலுகைகள் கிடைக்கும். வருமானம் உயரும். குலதெய்வ வழிபாடுகளைச் செய்வீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிலர் புதிய தொழில் தொடங்க முயற்சி செய்வார்கள். தொழில் துறைகளின் மூலம் உபரி வருமானம் உண்டாகும். இதனால் சேமிப்புகள் உயரும். வேலைகளில் சிறு தடுமாற்றங்கள் ஏற்படலாம். அதனால் பொறுமையுடனும், பொறுப்புடனும் நடந்து கொள்ளவும். பெற்றோர் தக்க சமயத்தில் உதவுவார்கள். உங்களின் முக்கியமான வேலைகளை ரகசியமாக வைத்துக் கொள்வீர்கள். ஆனாலும் நண்பர்கள் உங்கள் மீதுள்ள பொறாமையினால் பகைமை பாராட்டுவார்கள். அதைப் பெரிதுபடுத்த வேண்டாம். தேவையில்லாத விடயங்களை மனதில் போட்டுக் குழப்பிக்கொள்வீர்கள். பழைய வழக்குகள் முடிவதில் காலதாமதம் ஏற்படும். மற்றபடி உழைப்பிற்கேற்ற வருமானம் கிடைக்கும்.

உங்களின் செயல்களைத் திட்டமிட்டு சரியாகச் செய்து முடித்து விடுவீர்கள். தற்போது வசிக்கும் வீட்டை புதுப்பிப்பீர்கள். ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். புதியவற்றைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக்கொள்வீர்கள். தெய்வ வழிபாடுகளில் மனம் ஈடுபடும். புதிய இடங்களில் உங்களுக்கு சிறப்பான வரவேற்புகள் கிடைக்கும். ஆடம்பர கேளிக்கைகளில் குடும்பத்தாருடன் பங்கேற்று மகிழ்வீர்கள். உங்களை நம்பி வந்தவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வீர்கள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றிவிடுவீர்கள். அனைத்துப் பிரச்சினைகளையும் நுட்பமாக ஆராய்ந்து தீர்க்கமாக முடிவெடுக்கும் காலகட்டம் இது.

உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் ஏற்பட்ட கெடுபிடிகள் குறையும். சக ஊழியர்கள் உங்களின் வேலைகளை தாமாகவே முன்வந்து பகிர்ந்து கொள்வார்கள். மேலதிகாரிகள் உங்களின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலிப்பார்கள். உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சுமுகமாக முடியும். கூட்டாளிகள் உங்களிடம் நட்போடு பழகுவார்கள். புதிய சந்தைகளை நாடிச் சென்று வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். போட்டிகளை சாதுர்யமாக சமாளிப்பீர்கள். வாகனங்களுக்கு சிறிது பராமரிப்பு செலவு செய்ய நேரிடும்.

அரசியல்வாதிகளுக்கு கட்சியில் முக்கியப் பொறுப்புகள் கிடைக்கும். தொண்டர்களின் ஆதரவுடன் பதவியைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். முக்கியப் பிரச்சி




னைகளில் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

கலைத்துறையினருக்கு அனுகூலமான திருப்பங்கள் ஏற்படும். பாராட்டும், பணமும் ஒருங்கே கிடைக்கும். சக கலைஞர்களின் மூலம் உங்களைப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். ரசிகர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். அவர்களின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

பெண்மணிகளுக்கு கணவருடனான ஒற்றுமை சுமாராகவே இருக்கும். அதனால் நிதானத்துடன் செயற்படவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மற்றபடி பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். உங்களின் குடும்பம் நல்ல நிலையை அடையும். மாணவமணிகளுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். வெளிவிளையாட்டுகளில் ஆர்வத்தைக் குறைத்துக்கொண்டு முன்னேறவும். ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

**சித்திரை 3, 4 பாதங்கள்:** இந்த குரு பெயர்ச்சியால் எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்க சிறிது கால தாமதம் ஆகலாம். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும்.

**சுவாதி:** இந்த குரு பெயர்ச்சியால் குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். நிதானமாக பேசுவது நன்மை தரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்கள் வரும். அக்கம் பக்கத்தினருடன் கவனமாக பழகுவது நல்லது. வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் நன்மை தரும். நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும். பொருளாதார வசதிகள் பெருகவும் வாய்ப்பான காலமிது. சிலருக்கு புதிய சொத்துக்கள் வாங்கவும் பாக்கியம் ஏற்படும்.

**விசாகம் 1, 2, 3 பாதங்கள்:** இந்த குரு பெயர்ச்சியால் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றைப் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெற உழைக்க வேண்டும். பணவரவு உண்டாகும். எதிர்பார்த்த நற்செய்திகள் தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். தேவையில்லாத பேச்சுவார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது. பதவி உயர்வால் மக்களுக்கு நன்மைகள் செய்து மனம் மகிழ்வீர்கள். பண விடயங்களை கவனமாக கையாள்வது நன்மை தரும். விற்பனையின் போது கவனம் தேவை. சக ஊழியர்களுடன் பழகும் போது கவனம் தேவை. வேலைகள் எளிமையாக தோன்றும். விருந்து கேளிக்கைகளில் கலந்து கொள்வீர்கள். நிதானமாக செயற்படுவது நன்மை பயக்கும்.

**பரிகாரம்:** குலதெய்வத்தை தினமும் வணங்கி வர எல்லா நன்மைகளும் உண்டாகும். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும் ;

**சிறப்பு பரிகாரம்:** காக்கைக்கு தினமும் சாதம் வைத்து வரவும் ;

**சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை நம" என்ற மந்திரத்தை தினமும் 15 முறை சொல்லவும்

**அதிஷ்ட எண்கள்:** 2, 6, 7, 9 ;
**அதிஷ்ட ஹோரைகள்:** சந்திரன், செவ்வாய், சுக்கிரன், குரு ;

**அதிஷ்ட திசைகள்:** மேற்கு, வடக்கு;
**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய், வியாழன்

(தொடரும்)

# இராசிபலன்

11.05. 2024
சித்திரை 28, சனிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 5.19 மணிவரை

மிருக சீரிடம் பிற்பகல் 1.07 மணிவரை
சுபநேரம்-2.54-4.24 மணிவரை
இராகுகாலம் -8.54-10.24 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்
சித்திரை , சுவாதி.

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், மாற்றங்களினால் ஏற்றம் உருவாகலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள்,காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேணடிய நாள், எடுத்த காரியத்தை நிறைவேற்ற கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்,அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.




நண்பர்களின் சந்திப்பால் பரவசம் அடைவீர்கள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்,வருமானம் திருப்தி தரும்.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.




புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

புத்தி உள்ள மனிதர்களுடன் சேர்பவர்கள் ஞானத்தைப் பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக ஆரம்பப்பிரிவு விளையாட்டு அபிவிருத்தி (செயற்பட்டு மகிழ்வோம்) செயற்றிட்ட இணைப்பாளரும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி கலாமன்ற சன சமூக நிலைய முன்னாள் செயலாளருமாகிய சிவஞான சுந்தரம் சிவகாந்தி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதவானாக தெரிவு செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்திக் கொண்டார். (நி-6)

## பரீட்சைக் காலங்களில்
# மின் இணைப்பு துண்டிப்பில் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடியுங்கள்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெற்று வரும் நிலையில், குறித்த பரீட்சைகள் நிறைவடையும் வரையில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மின் கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பை துண்டிக்கும் செயற்பாடுகளில் நெகிழ்வுப் போக்கை பின்பற்றுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை சம்மந்தப்பட்ட தரப்புக்களினால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

வடமாகாண மின்சார சபையின் பணிப்பாளர் மற்றும் யாழ். மாவட்ட மின்சார சபையின் பொது முகாமையாளர்களுடன் நேற்று முன்தினம் மாலை அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் நெடுந்தீவில் ஏற்படும் மின்சார பிரச்சினைக்கு தீர்வினை காண புதிய மின் பிறப்பாக்கி ஒன்றினை உடனடியாக வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-6-33)


# பொதுக்கூட்டமும் சேவைநலன் பாராட்டும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் நிர்வாக சபை தெரிவிற்கான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.30 மணிக்கும் அதனைத் தொடர்ந்து மு.ப 11 மணிக்கு வருட இறுதி ஒன்று கூடல் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு யாழ். காங்கே சன்துறை வீதியில் அமைந்துள்ள திவ்ய மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் அ.அற்புதராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு அமைச்சர் கண்காணிப்பு விஜயம்



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

நெடுந்தீவிற்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வடதாரகை மற்றும் குமுதினி படகுகள் இறங்குதுறையில் நீண்ட நேரம் நிறுத்தப்படும் போது ஏற்படும் சிரமங்கள் இடையூறுகள் தொடர்பில் ஆராய்ந்து கொண்டார். குறித்த விஜயத்தின் போது ஏற்படும் நிலைமைகளை பார்வையிட்டதுடன், இடையூறுகளை அகற்றுவது தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடி இலகுவான வழிமுறைகளை ஏற்படுத்தி கொடுத்தார். இவ் விஜயத்தின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் வேலணை பிரதேச செயலர், நெடுந்தீவு பிரதேச செயலர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் படகு உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6)



யாழில் இருந்து சிவனொளிபாதமலைக்கான மூன்று நாள் தலயாத்திரை நேற்று காலை நல்லூர் கந்தசுவாமி கோவிலை வழிபட்ட பின்னர் ஆரம்பமானது. இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையும் மலையக இந்துக் குருமார் ஒன்றியமும் இணைந்து யாத்திரையை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

(படம்-சிவசாந்தன்)



126 வருடம் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் புகழ்பெற்ற மகப்பேற்று வைத்தியர் கெங்கம்மாவின் ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, மருத்துவ, சத்திர சிகிச்சை விடுதிகள் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

(படங்கள்- சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 220 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 120 |
| தக்காளி | 100 | 150 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 200 |
| கோவா | 150 | 200 | 170 | 200 |
| கரட் | 300 | 260 | 250 | 250 |
| பூசணி | 80 | 180 | 100 | 80 |
| புடோல் | 70 | 300 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 180 | 200 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 700 | 300 | 400 |
| லீக்ஸ் | 250 | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 280 | 300 |
| கறிமிளகாய் | 400 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 400 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1000 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 300 | 400 | 400 | 350 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 180 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 70 |
| [illegible] | [illegible] | [illegible] | 120 | -- |

# வீட்டில் கஞ்சாசெடி வளர்த்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பத்திரகாளி கோவில் அருகாமையில் உள்ள வீட்டில் 8 அடி 700 செ.மீ உயரமான கஞ்சா செடியினை வளர்த்தவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்த தலைமையிலான யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலில் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரும் இணைந்து தேடுதலில் ஈடுபட்டு வீட்டில் வளர்த்த 46 வயதான வீட்டின் உரிமையாளரை கைது செய்துள்ளனர்.(நி-6-33)

# சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூசை, வசந்தமண்டப பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)



விளையாட்டில் சாதனை படைத்த ஸ்ரீசெயானந்த பவன் அகிலத்திரு நாயகிக்கு கடந்த புதன் கிழமை முள்ளியவளை மக்கள் சார்பாக முல்லையின் வீரமங்கை பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 ஆயிரத்தை தொட்ட டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரை பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்தை அண்மித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 4 ஆயிரத்து 899 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், வட மாகாணத்தில் 4 ஆயிரத்து 397 பேரும் மத்திய மாகாணத்தில் ஆயிரத்து 977 பேரும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அத்தோடு, 4 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாயமுள்ள வலயங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

எனவே டெங்கு நோய்ப் பரவலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (நி-6)

# மதுப் பாவனையில் வீழ்ச்சி ஆய்வில் தகவல்

(கொழும்பு)

கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தின் தமிழ், சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மதுசாரப் பாவனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

புதுவருட கொண்டாட்டக் காலங்களில் மதுசாரப் பாவனை குறைவடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பான கருத்துக்களுக்கு மதுசாரத்தின் விலை அதிகரிப்பே காரணம் என ஆய்வில் பங்கேற்ற 71.5 சதவீதமானோர் தகவல் வழங்கியுள்ளதாக மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் குறிப்பிட்டுள்ளது. இது சமூகத்தில் சிறந்த போக்கை எடுத்துக்காட்டுவதாகவும், சுகாதாரத் துறையின் அதிக செலவினத்தை தவிர்க்க முடியும் எனவும் அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

(710)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
## 42, மூளாய் வீதி 1ம் ஒழுங்கை, வட்டாரம்-10

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10, மூளாய் வீதி 01 ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 42 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **தில்லையம்பலம் செல்லம்மா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **கந்தையா சிவசம்பு தவராசா** ஆகியவர் குறித்த ஆதனம் தனது தந்தை கந்தையா சிவசம்புவினாலும் தனது தந்தையின் சகோதரி தில்லையம்பலம் பெண் செல்லம்மாவினாலும் 1953 ஆம் ஆண்டளவில் கொள்விலையாக வாங்கப்பட்டிருந்தது எனவும், குறித்த ஆதனத்தினை இன்றைவரை தானே ஆண்டனுபவித்து வருகின்றேன் எனவும், ஆனால் தனது பெற்றோரின் பெயரில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் விபரத்தினை யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை எனவும், குறித்த ஆதனத்தில் இன்றுவரை எந்தவிதமான தங்கு தடையுமின்றி சமாதானமாக ஆண்டு அனுபவித்து வருகின்றேன் என்றும், குறித்த ஆதனத்தின் தெற்குப்பக்க ஆதனத்தின் வடக்கெல்லையில் சிவசம்பு தவராசாவின் ஆதனம் (E 746/105) என தனது பெயரே எல்லையாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எனவே ஆட்சியுரிமை சட்டத்தின்படி குறித்த ஆதனத்தின் முழு உரிமையாளர் தானே எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 3431/28.02.2018 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த கந்தையா சிவசம்பு தவராசா ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கந்தையா சிவசம்பு தவராசா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-0328)

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

# எனது 33ஆம் ஆண்டு ஆன்மீகப் போராட்ட பாதையிலே



இறை நீதிமன்றம்

| வழக்காளி | நீதியரசர் | எதிராளி |
|---|---|---|
| சோழியூரான் (சந்ததிப் பூசகர்) | பறளாய் ஈசுர விநாயகர் | சிறீலங்கா அரசு |

ஈசுர விநாயகரிடம் மனுத்தாக்கல் செய்தமை (08.11.1991) ஆம் மனுவில் அன்றைய பிரதான கோரிக்கை, கொழும்பு அரசியலில் சூறாவளி ஏற்பட்டு பூகம்பமாக வெடிக்க வேண்டும்.

**என் அன்பு உள்ளங்களே !**

யார் இந்த விக்னேஸ்வரன் கடந்த (28.12.2020), (31.08.2020) வலம்புரிப் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தை மீண்டும் சிந்திப்போம்! செயற்படுவோம் வாரீர் வாரீர்!

வன்னி இறுதியுத்தத்தில் எங்களுக்கு எவருமேயில்லை என்பதை நிரூபித்த பின்னர் இருந்தே இருந்து பார்த்தேன். உங்கள் பிரச்சினையை தீர்க்க எவருமில்லை ஆளில்லாத காரணத்தால் நானே வருகின்றேன் என்ற (ஆளில்லாதவனுக்கு ஆண்டவனே துணை) அன்றைய வாக்கிற்கமைய ஈசுர விநாயகர்தான் விக்னேஸ்வரன் ஐயா வடிவம் தாங்கி அவரின் பிரதிநிதியாக வந்திருப்பவர் என்பதை 31.12.2014 அன்று வலம்புரிப் பத்திரிகையில் எல்லோருக்கும் அறியத் தந்திருந்தேன். மீண்டும் சிந்தித்துப் பார்ப்போம் ! என்ன ஆச்சரியம் அங்கு நீதியரசர் ஈசுர விநாயகர் இங்கு நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா ஈசுர விநாயகனின் மறுபெயர் விக்கினேஸ்வரன். மேலும் அங்கு சர்வவல்லமை பொருந்தியவர் ஈசுர விநாயகர் இங்கு தன் நிகரில்லாத தலைவன் விக்கினேஸ்வரன் ஐயா இதைவிட வேறு என்ன வேண்டும் இப்போது தெளிவாகப் புலனாகின்றது தானே. இந் நிலையில் இங்கு தமிழ் மக்களோ தலைமைத்துவத்தை தெரியாமல் தடுமாறுகின்றனர். ஆனால் சிங்கள மக்களோ விக்கினேஸ்வரன் ஐயா என்றதும் பொங்கி எழுகின்றனர். ஏன் ? எதற்காக ? அதாவது தமிழ் மக்களுக்கோ விக்னேஸ்வரன் ஐயா யார் என்று இன்னும் புரியவில்லை. ஆனால் சிங்கள் மக்களுக்கு விக்கினேஸ்வரன் ஐயா எதற்காக வந்திருக்கின்றார் என்று தெளிவாகப் புரிந்துவிட்டது. வேறொன்றுமில்லை பராபரமே இன்னும் உணரவில்லையா? காலம் பதில் சொல்லியே தீரும். விக்கினேஸ்வரன் ஐயாவின் கரங்களைப் பலப்படுத்துவோமாக! நினையுங்கள்! சிந்தியுங்கள்! தெளியுங்கள்! உணருங்கள்!!! வலம்புரிப் பத்திரிகையிலே (28.12.2020)

**தமிழ் மக்களே,**

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டில் கட்சி அரசியலை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு தமிழின விடுதலை சார்ந்த அரசியலையும் பூகோள அரசியலையும் கையாளவேண்டிய நிலைக்கே வந்துள்ளோம்.

எனவே ஈசுர விநாயகர் தும்பிக்கையுடன் நேரே வரப்போவதில்லை. அவர் கூறியருளிய வாக்கின்படி இன்னும் மக்கள் மத்தியில் நடமாடிக்கொண்டிருக்கும் சி.வி. விக்கினேஸ்வரன் ஐயாவே தமிழின விடுதலைக் கூட்டமைப்புக்கும் தலைவர் என்பதை மீண்டும் அனைத்து தமிழர்களுக்கும் கூறிவைக்க விரும்புகின்றேன். "ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்" தேவாரம் என்று திருநாவுக்கரசு நாயனார் தனது அறியாமையை நினைத்து உருகிப் பாடுவதைப் போன்று நினையுங்கள்! சிந்தியுங்கள்! தெளியுங்கள்! உணருங்கள் !!! ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு வெற்றி நிச்சயம்.

**வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரும்**

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் கடந்த 75 வருடங்களாக சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழர்களை ஏமாற்றி ஆட்சியும் நடாத்தி விட்டனர். இப்போது ஐ.நா சபைக்கு வழங்கிய உறுதிமொழிகளையும் நிராகரித்து சர்வதேசத்தையே ஏமாற்றிய சிங்கள அரசியல் நிபுணர்கள், எனவே இனிமேல் எந்தவொரு சிங்கள அரசியல் தலைவரையும் நம்புவதற்கு தமிழர்கள் தயாரில்லை. என்பதை வெளிப்படுத்தி தமிழர்களின் விடுதலை சார்ந்த கட்டமைப்புக்கு சமகால அரசியலில் தமிழ்ப் பொது வேட்பாளர் காலத்தின் கட்டாயம் என்பதை உணர்வோமாக. இதன்மூலம் இந்த நாட்டின் தமிழர்கள் தமிழ்தேசிய இனம் என்பதையும் நாட்டின் இறை யாண்மையின் பங்குதாரர்கள் (இலங்கை இந்திய ஒப்பந்தம் (1987)) என்ற விடயத்தையும் சர்வதேசத்திற்கு புரியவைக்கும் ஒரு தேர்தல் களம் என்றே கூறலாம். இப்பொழுது நடக்கும் சம்பவங்களின் முடிவுச்சம்பவம் இதுவரை உணராத எல்லோரையும் உணரவைக்கும் என்று ஈசுர விநாயகர் கூறியருளுகின்றார்.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றோர் பின்னர்
வேறொன்று கொள்வாரோ !"

சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கக்குவான் இருமல் தொற்று

# 5 குழந்தைகள் பிரித்தானியாவில் பலி

(லண்டன்)

பிரித்தானியாவில் பரவி வரும் கக்குவான் இருமல் கிருமித்தொற்று காரணமாக ஐந்து குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த உயிரிழப்புக்கள் ஜனவரி முதல் மார்ச் இறுதி வரையான மூன்று மாதங்களில் பதிவானவை என UK Health Security Agency தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவில், இவ்வாண்டு 2,700 இற்கும் மேற்பட்ட கக்குவான் இருமல் கிருமி வழக்குகள் பதிவாகியுள்ளன.

அதன்படி மார்ச் மாத இறுதி வரை 2,793 வழக்குகள் பதிவாகியுள்ளதாக ஹெல்த் செக்யூரிட்டி ஏஜென்சி வெளியிட்டுள்ள புதிய புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

இது கடந்த ஆண்டு பதிவான எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகமாகும் என குறிப்பிடப்படுகின்றது.

"கக்குவான் இருமல் கிருமித் தொற்றானது, அனைத்து வயதினரையும் பாதிக்கும், எனினும் சிறு குழந்தைகளுக்கு இதன் தாக்கம் அதிகம் என ஆலோசகர் தொற்றுநோய் நிபுணரான வைத்தியர் காயத்ரி அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்காலிக தரவுகளின்படி, மார்ச் மாதத்தில் மட்டும் 1,319 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், ஜனவரியில் 556 தொற்றாளர்களும், பெப்ரவரியில் 918 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கக்குவான் இருமல் கிருமி "100 நாள் இருமல்" என்று அழைக்கப்படுகிறது. (நி-6)

# அமெரிக்காவின்

# தனித்து போ

## இஸ்ரேலியப் பிரதம

(ஜெருசலேம்)

**ஹமாஸ் அமைப்புக்கு எதிராக அமெரிக்காவின் ஆ தனித்துப் போரிடத் தயார் என இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.**

ஆயுத விநியோகத்தை நிறுத்துவோம் என அமெரிக்கா எச்சரித்துள்ள நிலையில், இவ்விடயம் தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு காஸாவில் அமைந்த ரஃபா நகரில் தரைவழித் தாக்குதலைத் ஆரம்பித்தால், இஸ்ரேலுக்கு ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் வழங்குவதை நிறுத்துவோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அண்

மைய
ந்தார்
இ
தாக்
தங்க

# சிவகாசி பட்டாசு ஆலையில் பயங்கர வெடிவிபத்து

## 6 பெண்கள் உட்பட 10 தொழிலாளர்கள் பரிதாப உயிரிழப்பு

(டில்லி)

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் நேரிட்ட பயங்கர வெடிவிபத்தில் 6 பெண்கள் உட்பட 10 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

மேலும் காயமடைந்த 14 பேர் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகேயுள்ள திருத்தங்கல் ஸ்டாண்டர்ட் காலனியைச் சேர்ந்த சரவணன், செங்கமலபட்டி அருகே பட்டாசு ஆலையை நடத்தி



வருகிறார்.

இங்கு 80 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த ஆலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் உராய்வு காரணமாக திடீர் வெடிவிபத்து நேரிட்டது. இதில் 7 அறைகள் தரைமட்டமாகின. மேலும் 7 அறைகள் சேதமடைந்தன.

தகவலறிந்து வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர், தீயைஅணைத்து, மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்தில் 6 பெண்கள் உட்பட 10 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த 14 பேர் மீட்கப்பட்டு, சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-6)

# விஜயகாந்திற்

# பெற்றுக் கொ

(டில்லி)

மறைந்த நடிகரும், தேமுதிக தலைவருமான கப்டன் விஜயகாந்த்துக்கு பத்மபூஷன் விருது நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. டில்லியில் நடந்த விழாவில் விஜயகாந்த் சார்பில் அவரது மனைவி பிரேமலதா விஜயகாந்த் ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் இருந்து பத்மபூஷன் விருதை பெற்றார்.

விஜயகாந்தின் கலை மற்றும் அரசியல் சேவையை பாராட்டி அவருக்கு பத்மபூஷன் விருது வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. அதன்படி ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற்ற விழாவில்



விஜய
வழங்

## மீண்டும் ரஷ்யாவின் பிரதமரானார்


# மைக்கேல் மிஷுஸ்டின்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் பிரதமராக மைக்கேல் மிஷுஸ்டின் நேற்று மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ரஷ்ய சட்டத்திற்கு இணங்க, கடந்த நான்கு ஆண்டுகளாக பணிபுரிந்த 58 வயதான மிஷுஸ்டின், செவ்வாயன்று அமைச்சரவையில் தனது இராஜினாமாவை சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து அவர் அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினினால் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் மிஷுஸ்டினின் மறுநியமனம் அரசியல் அரங்கில் பெரும் பேசுபொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



# ஹவுதியின் ஏவுகணை தாக்குத

## வளைகுடாப் பகுதியில் பற்றி எரியும்

## ஏடன் வளைகுடாவில் பதற்

(சோமாலியா)

ஹவுதி கிளர்ச்சிப் படையினர் ஏடன் வளைகுடா பகுதியில் பயணித்த 3 கப்பல்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

பாலஸ்தீனத்துக்கு எதிரான போரை இஸ்ரேல் கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்தி செங்கடல், ஏடன் வளைகுடா பகுதியில் பயணிக்கும் கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 7 ஆம் திகதி ஏடன் வளைகுடா பகுதியில் பயணித்த 3 கப்பல்களை குறிவைத்து ஹவுதி படையினர் ஏவுக

ணை
யுள்ள
தா
3 கப
அரசு
என
யின்
ள்ளா
ங்க
ப்பட
வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் ஆதரவின்றி
# ாரிடத் தயார்
## தமர் அதிரடி அறிவிப்பு

ின் ஆதரவின்றித்
ரதமர் பெஞ்சமின்


மையில் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை ரஃபா மீதான தாக்குதலுக்குப் போதுமான ஆயுதங்கள் தம்மிடம் இருப்பதாக



இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சூரிய புயல் தாக்கும் அபாயம்



(வோஷிங்டன்)

கடுமையான சூரிய புயல் ஒன்று உலகை தாக்கும் என தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் என்ற அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கலிபோர்னியா - தெற்கு அலபாமா வரை குறித்த காந்த புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா அரசின் கீழ் இயங்கும், தேசிய கடல் மற்றும் வளிமண்டல ஆய்வகம், கடுமையான சூரிய காந்த புயலுக்கான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பூமியின் வட அரை கோளத்தில் காந்த புயல் காரணமாக தகவல் தொடர்பில் பாதிப்பு ஏற்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, ஜிபிஎஸ், ரேடியோ அலைவரிசை, தகவல் தொடர்பு, மின் அமைப்பு போன்றவையும் இதனால் பாதிக்கக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு பின் ஏற்படும் வலுவான சூரிய காந்த புயலின் தீவிரத்தால் செயற்கை கோள்களின் செயற்பாடுகளும் முடங்க வாய்ப்புள்ளதாக, அமெரிக்க ஆய்வகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-6)

# திற்கு பத்மபூஷன் விருது;
# கொண்டார் பிறேமலதா



விஜயகாந்த் பத்மபூஷன் விருது வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரது பெயர் அதில் இடம்பெறவில்லை.

இதையடுத்து 2 ஆவது கட்டமாக இன்று டில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பத்ம விருதுகள் வழங்கும் விழா நடந்தது. இதில் ஜனாதிபதி திரௌபதி முர்மு பங்கேற்று பத்ம விருதுகளை வழங்கினார். இந்த விழாவில் விஜயகாந்தின் மனைவி பிரேமலதா விஜயகாந்த் மற்றும் மகன் விஜய பிரபாகரன் பங்கேற்றனர். விழாவில் விஜயகாந்துக்கான பத்ம பூஷன் விருதை ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் இருந்து பிரேமலதா விஜயகாந்த் பெற்று கொண்டார். இந்தியாவில் பத்ம பூஷன் விருது என்பது 3 ஆவது உயரிய விருதாகும். (நி-6)

# விமானத்தில் பயணிகள் மோதல்
# வெளியான அதிரடி காணொலி



(தாய்வான்)

தாய்வானில் இருந்து கலிபோர்னியா செல்லும் விமானமொன்றில் பயணிகள் இடையே ஏற்பட்ட தகராறு ஒன்றின் காணொளியானது தற்போது சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

குறித்த விமானத்தில் பயணித்த இரண்டு பயணிகளும் இருக்கைக்காக இவ்வாறு தாக்குதல் நடத்தியமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், விமானத்தில் அமர்ந்திருந்த பயணி ஒருவர் சுகயீனமடைந்துள்ளார்.

இதன் காரணமாக அவர் அருகே அமர்ந்திருந்த பயணி, வெற்றிடமாக இருந்த ஒரு இருக்கையில் அமர்ந்துள்ளார்.

இந்நிலையில் வெற்றிடமாக இருந்த ஆசனத்தில் ஏற்கனவே அமர்ந்திருந்த பயணி தனது இருக்கையை கோரியுள்ளதையடுத்து அதற்கு அந்த பயணி மறுப்பு தெரிவித்துள்ள நிலையில் அவர்கள் இருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

மேலும் விமான ஊழியர்களின் பொறுமை மற்றும் கடமை உணர்வை சமூகதளவாசிகள் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# க்குதல்களால்!
# ரியும் கப்பல்கள்!
## பதற்றம்

ணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான 3 கப்பல்களும் இஸ்ரேல் அரசுடன் தொடர்புடையவை என ஹவுதி கிளர்ச்சிப் படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதுவரை சேத விபரங்கள் எதுவும் வெளியிடப்படாத நிலையில் ஏடன் வளைகுடா பகுதியில் பத



ற்றம் ஏற்பட்டுள்ளது.

காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதலில் இதுவரை 34.904 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 78.514 இற்கும் ... (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டரியில் இயங்கும் பொம்மைகளால் ஆபத்து

## எச்சரிக்கை விடுக்கும் வைத்தியர்

**(கொழும்பு) சந்தையில் வாங்கப்படும் பட்டரியில் இயங்கும் பொம்மைகள் குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அரச வைத்தியர்கள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.**


இந்த பொம்மைகளில் லித்தியம், சில்வர் ஒக்சைடு மற்றும் அல்கலைன் பட்டன் பட்டரிகள் இருப்பதால், குழந்தைகள் அவற்றை விழுங்கலாம், காது அல்லது மூக்கில் வைக்கலாம்.

இந்த மின்கலங்களை குழந்தைகள் விழுங்கினால், அதன் மின் இரசாயனச் செயற்பாட்டின் ஊடாக குழந்தைக்கு உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடும்.

உணவுப் பாதையின் முதல் பகுதி இயற்கையாகவே குறுகலாக இருப்பதால், இவற்றை விழுங்கும்போது அதிகபட்ச சேதம் ஏற்படக்கூடும்.

விழுங்கப்பட்ட பட்டரி வயிற்றில் பயணித்து கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனூடாக வயிற்றில் பல பாதிப்புக்கள் ஏற்படுவதுடன், சுவாசக்குழாய் அடைப்புக் காரணமாக உயிரிழப்புக்கள் கூட ஏற்படலாம் எனவும் அவர் வலியுறுத்தினார்.



சிறு குழந்தையொன்று இவ்வாறான விபத்தில் சிக்கினால் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்து வருமாறும், அதுவரை 10 நிமிடங்களுக்கு 2 டீஸ்பூன் சுத்தமான தேனை குழந்தைக்கு முதலுதவியாக வழங்குமாறும் வைத்தியர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# முஜிபுர் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, நீக்கப்பட்டதன் காரணமாக வெற்றிடமாகியுள்ள அந்தப் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக முஜிபுர் ரஹ்மான் நேற்று பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்ட ரீதியாக தகுதி யற்றவர் என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

இதனையடுத்து குறித்த வெற்றிடத்திற்கு முஜிபுர் ரஹ்மானின்



பெயர் முன் மொழியப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நிலையிலே பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (நி-6)

# சா/த மீள்திருத்த பெறுபேறு நாச்சியாதீவு மாணவிக்கு '9ஏ' சித்தி

(மட்டக்களப்பு)

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த க.பொ.த (சாதாரண) தர பெறுபேறுகளின் மீள் திருத்த பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன்படி அ/நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி எம்.டி.இப்பத் சனா 9 ஏ சித்திகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இப்பாடசாலையிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் ஏற்கனவே ஒரு மாணவி மாத்திரமே 9 ஏ சித்திகளை பெற்றிருந்த நிலையில் குறிப்பிட்ட இம் மாணவியின் மீள் திருத்த பெறுபேறுகளின் பிரகாரம் இவர் 9 ஏ சித்திகளை பெற்றுள்ளார்.

இவருடன் சேர்த்து இரண்டு மாணவிகள் இம்முறை 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். (நி-6)

# இன்று ஒரு தகவல் 120



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இடைக்காட்டுச் சித்தர்

"இடைக்காட்டுச் சித்தர்" என்று ஒருவர் இருந்தார். சித்தர்கள் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு என்று சொல்கிறார்கள். அதற்குப் பின் தோன்றியவர் தான் இந்த இடைக்காட்டுச் சித்தர். இடைக்காடு எனும் ஊரிலே பிறந்திருப்பார் போல இருக்கிறது. ஞான மார்க்கத்திலே மிகவும் பற்றுள்ளவராக இவர் இருந்திருக்கிறார். அவர் கண்டறிந்த உண்மைகளை பாமர மக்களுக்கும் புரியும் படியாக பாடினார். பத்தாம் நூற்றாண்டிலே அவர் பாடி வைத்த பாட்டெல்லாம் இருபதாம் நூற்றாண்டிலே இருக்கும் நமக்கும் மிகவும் பொருத்தமாகத் தான் இருக்கிறது.

எதைப் பார்த்தாலும் அதன் மேல் ஆசைப்படுவது மனதின் இயல்பு. சிறிய வயதிலிருந்தே இந்தக் குணம் இருந்துகொண்டிருக்கிறது. எத்தனை குழந்தைகள் நிலாவைப் பார்த்தவுடனே அதைப் பிடித்துக் கொடு என்று அடம்பிடிக்க ஆரம்பித்து விடுவார்கள். நம்மால் அது முடியாத காரியம். நிலாவை இங்கேயிருந்து கையை நீட்டி தொட வேண்டும் என்றால் நமது கையின் நீளம் 2 1/2 லட்சம் நீளம் இருக்க வேண்டும். அவ்வளவு நீளமான கைக்கு எங்கே போவது? அதனால் தான் நிலாவைப் பிடித்துத் தரும்படி குழந்தை அடம்பிடித்தால் நிலாவை நாம் பிடிப்பதற்குப் பதிலாக அதை இங்கே வா என்று அழைக்கின்றோம். "நிலா-நிலா ஓடிவா!" என்று.

அழைத்தவுடன் அது ஓடியா வருகின்றது? ஏதோ அந்த நேரத்திற்கு குழந்தைக்கு ஒரு ஆறுதல். அவ்வளவு தான். இதை எதற்கு சொல்கிறேன் என்றால் எது முடியும் காரியம் எது முடியாத காரியம் என்பதை குழந்தையாக இருக்கும் போதே புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு தகுந்த மாதிரி பெற்றவர்கள் வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்காததால் தான் பெரியவர்களான பின் பிடிவாதக்குணம் போகாமல் போய் விடுகின்றது. பயிற்சி இருந்தால் மனதைக் கட்டுப்படுத்துவதற்கு அறிவு நன்றாகப் பயன்படும். மனதை அறிவுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவன் தான் ஞானி!

"மனம் என்பது கட்டுக்குள் அடங்காத ஒரு முரட்டு மாடு" என்கிறார் இடைக்காட்டுச்சித்தர். அந்த மாடு ஒரு கட்டுக்குள்ளே அடங்கிப் போய் விட்டதென்றால் விடுதலை கிடைத்தது என்று நிச்சயமாக நினைத்துக் கொள் என்றார் அவர்.

**மனம் என்னும் மாடு அடங்கின்**
**தாண்டவக்கோனே! - முக்தி**
**வாய்ந்த தென்று எண்ணேடா**
**தாண்டவக்கோனே!**

அப்படி என்றார் அவர். (தாண்டவக்கோன் என்பவரைப் பார்த்துப் பாடியதாக அர்த்தம்). மனதை அடக்கி ஆள்வது மட்டும் போதாது. நமது மனதிலேயே ஒரு பாம்பு இருக்கிறது. கொடுமையான விசப்பாம்பு அது. அது நமக்கும் கெடுதல். மற்றவர்களுக்கும் கெடுதல். அந்தப் பாம்பு நம் மனதிலே குடியிருக்கும் வரைக்கும் நாம் எந்தக் காரியத்திலேயும் வெற்றி பெற முடியாது. நாம் எதை ஆரம்பித்தாலும் வீணாகப் போய்விடும். எதைச் செய்தாலும் வீணாகப் போய்விடும். அப்பேர்பட்ட பாம்பு எது தெரியுமா? அது தான் கோபம் என்கிற பாம்பு. சினம் என்ற பாம்பு செத்துப் போனால் அதற்குப் பின் நாம் நினைப்பது எல்லாம் நிறைவேறும்! கைகூடும்! சித்தியாகும்.

**" சினம் என்னும் பாம்பிறந்தால்**
**தாண்டவக் கோனே! - யாவும்**
**சித்தி என்றே நினையேடா**
**தாண்டவக்கோனே! "**

அடுத்தது ஆசை என்பது என்ன என்று சொல்கிறார். அது ஒரு பசு மாடாம். அடங்காத பசுவாம். அந்த அடங்காத தன்மை அழிய வேண்டுமாம். அந்தப் பசுவை ஒரு எல்லைக்குள்ளே கொண்டுவந்து வைத்தால் இந்த உலகிலே உள்ள உண்மைகள் எல்லாம் புரிந்து கொள்ளலாமாம்.

**" ஆசை என்னும் பசு மாடின்**
**தாண்டவக் கோனே! - இந்த**
**அண்டம் எல்லாம் கண்டறிவாய்**
**தாண்டவக்கோனே! "**

இப்படி அவர் நிறைய அறிவுரைகள் சொல்லிக்கொண்டே போகிறார். அதாவது முதலில் மனதை அடக்க வேண்டும். இரண்டாவதாக சினத்தை அழிக்க வேண்டும். மூன்றாவது பேராசைக்கு இடம் கொடுக்கக் கூடாது. கவலை இல்லாமல் வாழவேண்டும் என்றால் அதற்கு இடைக்காட்டுச்சித்தர் சொல்லும் வழி இது தான். இந்த வழி நமக்கெல்லாம் கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கும். ஆனால் அதையெல்லாம் கடைப்பிடிப்பதற்கு தான் சிறிது யோசனையாக இருக்கும். பல சந்தர்ப்பங்களிலே நாம் ஆசையைப் பிடித்துக் கொண்டு இருக்கிறோமா? இல்லை அது நம்மை பிடித்துக் கொண்டிருக்கிறதா என்பதையே புரிந்து கொள்ள முடிவதில்லை.

ஒரு கம்பளி மூட்டை ஆற்று வெள்ளத்தில் மிதந்து போய்க் கொண்டிருந்தது. கரையிலே நின்று கொண்டிருந்தவன் அதைப் பார்த்து ஆசைப்பட்டான். உடனே குபீர் என்று வெள்ளத்தில் குதித்தான். நீந்திப் போய் அந்தக் கம்பளி மூட்டையைப் பிடித்து கரைக்கு இழுத்தான். அவனால் முடியவில்லை. ரொம்ப நேரமாக போராடிக் கொண்டிருந்தான். கரையிலே நின்று கொண்டிருந்த இன்னொருவன் சத்தம் போட்டான். "முடியவில்லை என்றால் வந்துவிடு அதற்காக வீணாக ஏன் அல்லாடிக் கொண்டிருக்கிறாய்?" என்றான்.

அதற்கு அவன் "நான் இதை எப்பவோ விட்டுவிட்டேன். இப்போது அது தான் என்னை பிடித்துக் கொண்டிருக்கின்றது ஏன் என்றால் இது கம்பளி மூட்டை இல்லை கரடிக்குட்டி!" என்றானாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்களுக்கு உடல் பருமன் முக்கிய காரணி

## எச்சரிக்கும் சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இலங்கையில் 46 சதவீத பெண்களும் 10 சதவீத பாடசாலை மாணவர்களும் உடல் பருமனுடன் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால எச்சரித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு சுகாதாரம் தொடர்பான விடயங்கள் குறித்து விளக்கமளிக்கும் விரிவுரையின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையில் 89 சதவீதமான மரணங்கள் புற்றுநோய், இதய நோய், நுரையீரல் நோய் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்களால் ஏற்படுகின்றது.

இதில் பெரும்பாலான இலங்கையர்கள் இதய நோய் மற்றும் பக்கவாதம் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

வருடாந்தம் சுமார் 60,000 இலங்கையர்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். இதனால் கடந்த வருடம் 4,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை தொற்றாத நோய்களுக்கு உடல் பருமன் ஒரு முக்கிய காரணியாக இருப்பதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# மன்னாரில் சுமார் 160 ஏக்கர் பனைமரக் காணிகள் அபகரிப்பு

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா பாவிலான்பாட்டன் குடியிருப்பு பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 160 ஏக்கர் பனை மரங்களை கொண்ட காணிகள் சட்டவிரோதமான முறையில் இந்திய தனியார் கம்பனி ஒன்றிற்கு கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து வரும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு கனிய மணல் அகழ்வு இடம் பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மணல் அக்ழ்வுக்காக குறித்த காணியை விற்பனை செய்துள்ள நிலையில் தற்போது எங்களை உள்ளே நுழைய விடாது காணிக்கு சுற்று வேலி அடைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் உரிய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு குறித்த காணியை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்துள்ளனர். (நி-6-285)

# அட்சய திருதியை நாளில் அலைமோதிய மக்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அட்சய திருதியை நாளான நேற்று யாழிலுள்ள நகைக் கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, அட்சய திருதியை நன்நாளில் தங்கம் வாங்கினால் வீட்டில் செல்வச் செழிப்பு அதிகரிக்கும் என்பது மக்களிடையே காலாதிகாலமாக நிலவும் ஐதீகமாகும். அந்தவகையில் நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக நிலவிய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தங்கத்தினை கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டாத சூழ்நிலையில் இம்முறை ஓரளவு நெருக்கடி நிலை தீர்ந்த நிலையில் தங்க கொள்வனவில் மக்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான நகைக்கடைகளில் நேற்றுக் காலை முதல் ஏராளமான மக்கள் நகைகளை வாங்குவதற்காக காத்திருந்தமையை அவதானிக்க முடிந்துள்ளது. (நி-6)



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3113


### ரியா

“மச்சி நான் என்ன பண்ணினாலும் என் பொண்டாட்டி குறுக்க நிற்கிறாடா”

“கார் ஓட்டி பாரேன்”

### ரமணன்


காதல் என்பது மொட்டை மாதிரி
அடிக்க அடிக்க வளரும்



கல்யாணம் என்பது சொட்டை மாதிரி
ஒரு தடலை விழுந்திட்டால்
வளரவே வளராது

### நளின்

ஒரு வார்த்தை பேச ஒரு வருஷம் காத்திருந்தேன்



ஆமா பிறகு பிறந்த உடனேயா பேச முடியும்?

### சொப்னா

திருமண விருந்தில் ரசம் இல்லாததால்
திருமணத்தை நிறுத்திய மணமகன்-செய்தி



எவ்வளவு அழகா தப்பிச்சிருக்கான் பாரு
இந்த ஐடியா நமக்கு வராமல் போச்சே

### தமிழினி




### தமயந்தி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 478



இவர்கள் இவ்வளவு முரட்டு மனிதர்கள் அல்லவா? மனிதர்களைக் கொல்வது இவர்களுக்கு வாழைக்காயை அரிவது போன்றது. ஆனால் குதிரைகளிடம் இவர்களுக்கு அளவில்லாத அபிமானம். குதிரைகளின் கால் குளம்பில் இரும்புப்பூண் அடித்துத்தான் அவர்கள் நாட்டில் குதிரைகளை ஓட்டுவார்களாம். நாம் குதிரைகளை வெறுங்காலுடன் ஓடச் செய்கிறோமாம். அதனால் நாம் கருணையற்ற, அநாகரிக மிருகங்களுக்கும் கேடான மனிதர்களாம்! நம்மிடம் குதிரைகளை விற்பதே பாவமாம்! இன்று காலையில் என்ன நடந்தது தெரியுமா?"

"சொல்லுங்கள்!"

"கப்பலில் எல்லோரும் ஏறிக் கொண்டோம். பாய் மரங்கள் விரித்தோம் கப்பல் கிளப்பிவிட்டது. அப்போது கரையில் ஒரு குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. அவ்வளவுதான், முல்லைத் தீவில் உடைந்த கப்பலிலிருந்து தப்பிக் கரையேறிய அவர்களுடைய குதிரைகளில் ஒன்றாயிருக்கலாம் என்று சந்தேகித்தார்கள். அவர்களில் ஒருவன் கப்பலிலிருந்து இறங்கிப் பார்த்து விட்டுத்தான் வருவேன் என்றான். எங்களையும் அவனுடன் சேர்த்து அனுப்பினார்கள்."

"பிறகு?"

"குதிரை அகப்படவில்லை. தம்பி! நீ அகப்பட்டாய்! எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று, பார்! இந்தக் குதிரைப் பிரியர்களை வேலை தீர்ப்பதற்கு எவ்வளவு சௌகரியமாய்ப் போயிற்று."

"எல்லாம் சரிதான் இந்தப் பிள்ளை நம்முடைய கேள்விக்கு இன்னும் விடை சொல்லவில்லை" என்று ஞாபகப் படுத்தினான் தேவராளன்.

"சொல்லுகிறேன், ஐயா! சொல்லுகிறேன், நான் சோழ குலத்திற்கு ஊழியம் செய்ய ஏற்றுக்கொண்டவன். ஒரு நாளும் உங்களுடன் சேரமாட்டேன்."

"வேளக்காரப் படையைச் சேர்ந்திருக்கிறாயா? சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாயா!"

"அதெல்லாம் இல்லை."

"பின்னே என்ன தயக்கம்? நீ போர் வீரன். எந்தக் கட்சியில் அதிக அநுகூலம் இருக்கிறதோ, அதில் சேரவேண்டியது தானே!"

சோழ குலத்தாருடன் உறவு பூணுவதற்கு எல்லாச் சபதங்களைக் காட்டிலும் பலம் அதிகம் கொண்ட காரணம் தனக்கு இருக்கிறது என்பதை வந்தியத்தேவன் அவர்களிடம் சொல்லவில்லை. இளைய பிராட்டியின் கடைக்கண் பார்வையையும், முல்லை நிகர்ப் புன்னகையையும் காட்டிலும் சோழ குலத்தாருக்கு உயிரைக் கொடுக்க வேறு காரணம் தனக்கு வேண்டுமா? அப்புறம் இளவரசரின் இணையில்லா சிநேகம் இருக்கிறது! அவருடன் ஒரு தடவை சிநேகமானவன் மறுபடி மாற முடியுமா?

"எது எப்படியிருந்தாலும், உங்களுடைய கொலைகாரக் கூட்டத்தில் நான் சேரமாட்டேன்!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்படியானால் உன் உயிரைச் சமுத்திர ராஜனுக்குப் பலியிட ஆயத்தப்படு!" என்றான் ரவிதாஸன்.

### 51 அத்தியாயம்
### சுழிக் காற்று

காற்று அசையவில்லை கடல் ஆடவில்லை கப்பலும் நகரவில்லை. அலையற்ற அமைதியான ஏரியைப் போல் காணப்பட்ட கடலை நோக்கியவண்ணம் வந்தியத்தேவன் சிறிது நேரம் சும்மாயிருந்தான். அவன் உள்ளத்தில் மட்டும் பேரலைகள் எழுந்து விழுந்தன.

திடீரென்று இரு கரங்களையும் கடலை நோக்கி நீட்டிக் கொண்டு, 'ஓம் ஹ்ரீம் ஹ்ராம் வஷட்!' என்று கூவினான். மறுகணத்தில் கையில் கத்தியை எடுத்துக்கொண்டான். சக்கராகாரமாக இரண்டு தடவை சுழற்றினான்.


"ஆம்! ஆம்! சமுத்திர ராஜன் பலி கேட்கிறான்! இரட்டைப் பலி கேட்கிறான்.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## எது...? எது...?



அரசர் கிருஷ்ண சந்திரர் அரியணையில் வீற்றிருந்தார். அப்போது நவாபின் தூதன் அங்கு வந்தான். அரசர் அவனை வரவேற்றார்.

அந்த தூதன் இரண்டு வாத்துக் குஞ்சுகளை அவர் முன் வைத்தான்.

அரசர் வாத்துக் குஞ்சுகளைக் கவனித்தார். இரண்டும் ஒரே நிறம் ஒரே அளவுடையதாக இருந்தது. அவற்றிற்குள் எந்த வேறுபாடும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒன்றும் புரியாமல் தூதனை பார்த்தார் அரசர்.

"அரசே! நவாப் அவர்கள் இந்த வாத்துக் குஞ்சுகளை அனுப்பி உள்ளார். இவற்றில் எது ஆண் வாத்து என்பதைத் தாங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

அப்படிக் கண்டுபிடித்ததற்கான காரணத்தையும் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால், இந்த ஆண்டு நீங்கள் கப்பம் கட்ட வேண்டாம். செய்ய இயலாவிட்டால் உங்கள் சிற்றரசை எங்கள் நாட்டுடன் இணைத்துக் கொள்வோம் [illegible]றான் தூதன்.

அரசர் மீண்டும், அந்த வாத்துக் குஞ்சுகளை உற்றுக் கவனித்தார். கடினமான சோதனைதான் தனக்கு வைக்கப்பட்டுள் [illegible] கொண்டார்.

"இவற்றில் எது ஆண் வாத்து என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?" என்று அமைச்சர்களை பார்த்துக் கேட்டார்.

அமைச்சர்கள் எல்லாரும் அமைதியாக இருந்தனர்.

எப்படி கண்டுபிடிப்பது என்று கவலையில் ஆழ்ந்தார் அரசர்.

அங்கு வேலை செய்துக்கொண்டிருந்த கோபால் இதை கவனித்தான். அவன் அரசனிடம் சென்று, "அரசே! கவலைப்பட வேண்டாம்... எது ஆண் வாத்து என்பதை நான் கண்டுபிடிக்கிறேன்!" என்றான்.

"எப்படிக் கண்டுபிடிப்பாய்?" என்று கேட்டார்.

"அரசே! அந்த இரண்டு வாத்துக் குஞ்சுகளையும் அரண்மனைக் குளத்திற்கு எடுத்து வரச் சொல்லுங்கள் தூதனை. நாம் அனைவரும் அரண்மனை குளத்திற்கு செல்வோம்," என்றான்.

எல்லாரும் அரண்மனை குளத்தை அடைந்தனர்.

தூதனிடமிருந்து இரண்டு வாத்துக் குஞ்சுகளையும் வாங்கினான் கோபால். அவற்றை அரண்மனைக் குளத்தில் விட்டான்.

இரண்டும் மகிழ்ச்சியாக நீந்தத் தொடங்கின. அவற்றில் முன்னால் சென்ற வாத்தை சுட்டிக் காட்டி, "இதுதான் ஆண் வாத்து!" என்றான்.

"எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கிறாய்?" என்றார் அரசர்.

"அரசே! முன்னால் செல்கிற வாத்து ஆண் வாத்து, பின்னால் செல்கிற வாத்து பெண் வாத்து, எப்போதும் ஆண் வலிமை மிகுந்ததாக இருக்கும். பெண் மென்மையானதாக இருக்கும். அதனால், முன்னால் நீந்திச் சென்றது ஆண் வாத்தாகத்தான் இருக்க வேண்டும்," என்றான்.

கோபால்! உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை," என்ற அவர் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம்மை நாம் ஆள்வதற்கு தயாராகி விட்டோமா?

சமஷ்டி வேண்டும். பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி அதிகாரம் வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

அவ்வாறாக எங்களை நாங்களே ஆள்வதாக இருந்தால், அதற்கு ஏற்றாற்போல் எங்கள் மக்களை, எங்கள் இளம் சமூகத்தை நாம் வளப்படுத்த வேண்டும்.

ஆம், உரிமை கிடைக்கின்றபோது அதனைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தயாராக இல்லையாயின், எமக்குக் கிடைத்த உரிமை எங்கள் இனத்தைப் பாதாளத்தில் வீழ்த்தி விடும் என்பதுதான் உண்மை.

இதற்குக் கடந்த கால வடக்கு மாகாண அரசு நல்ல உதாரணமாகும்.

வடக்கு ~ கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டு தேர்தல் இடம்பெற்றபோது, வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனி மாகாண அரசு அமையப் பெற்றது.

இதில் வடக்கு மாகாண சபை எப்படி இயங்கியதென்பதை நாம் கூறி எவரும் அறிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

அந்தளவுக்கு மிக மோசமாக வடக்கு மாகாண அரச சபை நடந்து கொண்டது.

இதை நாம் கூறும்போது இக்குற்றச்சாட்டு ஒட்டுமொத்த மாகாண சபை உறுப்பினர்களையும் சாரும்.

ஆம், மாகாண சபை கூடும் ஒவ்வொரு பொழுதும் சண்டையும் சர்ச்சையும் கடிதப் பரிமாற்றங்களும் மொட்டைக் கடிதங்களும் கள்ளக் கையெழுத்துகளும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் ஊழல்களும் வாக்குவாதங்களுமே அங்கு நடந்தன.

தவிர, இரவோடு இரவாக ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்று; முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கையளிக்கப்பட்டது வரையில், நடந்த அத்தனையும் எங்கள் இனத்துக்கு ஈனமாகவே இருந்தன.

இதற்கு அடிப்படைக் காரணம் மாகாண சபையைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கவில்லை அல்லது அதற்கு நாம் தயார்ப்படுத்தவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

எனினும் இந்த அனுபவம் இன்னமும் பட்டறிவாக முன்னெடுக்கப்படவில்லை என்பதைக் கூட, நாம் சிந்திக்கத் தவறிவிட்டோம்.

உண்மை. ஒரு கணம் வடபகுதியின் சமகால நிலைமையை சீர்தூக்கிப் பாருங்கள்.

வீதி விபத்து மரணங்கள், போதைவஸ்து பாவனை, அதீத கையடக்கத் தொலைபேசிப் பயன்பாடு, தற்கொலை மரணங்கள், நிதி மோசடிகள், காணி அபகரிப்புகள், சட்டவிரோத கொல்களங்கள், களவு, கொள்ளை, வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி நடக்கின்ற அநியாயங்கள், வாள்வெட்டு என ஒரு பெரும் பட்டியலைத் தயாரிக்க முடியும்.

இதற்கு மேலாக, பொதுமக்களின் நலன்களை இம்மியும் கவனிக்காத ~ பொதுமக்களை ஈவுஇரக்கமின்றி அலைக்கழிக்கின்ற அரச அமைப்புகள் என்பதாக நிலைமை இருக்கும்போது, எப்படி எங்களால் எங்கள் உரிமையை வென்றெடுக்கவும் ஆட்சி நடத்தவும் முடியும் என்பது தான் நம் தாழ்மையான கேள்வி.

# நாட்டின் நலனுக்காக யாருடனும் இணைந்து செயற்படத் தயார்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

நாட்டின் நலனுக்காக யாருடனும் இணைந்து செயற்படத் தயார் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு நிலையம் பத்தரமுல்லை ஜயந்திபுர மாவத்தையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றதுடன், இதன்போது ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பிலும் அவரிடம் வினவப்பட்ட போது, ஜனாதிபதி வேட்பாளர் தயார் என அவர் பதிலளித்தார்.

நேற்றைய நிகழ்வில் தம்மிக்க பெரேராவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு நிலையங்கள் தொகுதி மட்டத்திலும் திறக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு விரிவான பிரசாரப் பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுஜன பெரமுன குறிப்பிட்டுள்ளது. (ம-7,10)

# மனைவியை கொலை செய்துவிட்டு 12 வருடங்கள் தலைமறைவான கணவர்

## பொலிஸாரால் கைது

மனைவியை மன்னா கத்தியால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட கணவர், தலைமறைவாகியிருந்த நிலையில் 12 வருடங்கள் கழித்து மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

37 வயது பெண்ணொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து உயிரிழந்த பெண்ணின் கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், இவர் ஒரு வருடம் கழித்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றில் ஆஜராகாமல் தலைமறைவாகியிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றம்சாட்டப்பட்டவர் நீதிமன்றில் ஆஜராகாத போதிலும் பலப்பிட்டி நீதிமன்றம் இவருக்கு மரண தண்டனை விதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள நபர் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்,

இவர் வெலிகம பிர தேசத்தில் உள்ள விகாரையொன்றில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10)

# 45 வயதுக்கு பின் அரச நியமனம் கிடைத்தவர்களுக்கும் ஓய்வூதியம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

45 வயதுக்கு பின்னர் அரச நியமனம் பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் நடைமுறை இங்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அமைச்சின் செயலாளர்களுக்கும் மாகாண பிரதம செயலாளர்களுக்கும் திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கையில் 2014.11.12 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 2014.12.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 (1) இன் ஏற்பாடுகளின்படி வழங்கப்பட்டுள்ள நிரந்தர நியமனங்களுக்கு, அந்த உத்தியோகத்தர்கள் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பில் ஓய்வூதியத்திற்காக பூர்த்தி செய்ய வேண்டிய ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வாராயின் தற்காலிக அமய (தினசரி பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யும் போது 45 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஓய்வூதிய உரித்தினை வழங்குதல்.

மேற்படி பரிந்துரையை 2014.11.12 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 2014.12.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014(I) ஆகியவற்றிற்கு மட்டும் ஏற்புடையதாக்கல்

2019.09.18 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 29/2019 இன் படி 45 ஆண்டுகளைக் கடந்து தற்காலிக, அமய (தினசரி, பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்போது அந்த சுற்றறிக்கையின் பந்தி 2 இன் துணைப்பிரிவு (ii) ஐ ஏற்புடையதாக்கல்

ஆகிய பரிந்துரைகளினை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் 45 வயதுக்குப் பின்னர் நியமனம் உறுதி செய்யப்பட்ட அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# உடமையில் ஐஸ்போதை மூவருக்கு விளக்க மறியல்

(வவுனியா)

ஐஸ் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதி மன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து கடந்த 28 ஆம் திகதி செட்டி குளத்தில் வசிக்கும் 35 வயது இளைஞர் ஒருவரை 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ்போதைப் பொருளுடன் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

நீதிமன்ற அனுமதி பெற்று குறித்த இளைஞர் பொலிஸாரால் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் உக்குளாங்குளம், மில் வீதி பகுதியில் வைத்து செட்டிகுளத்தில் வசிக்கும் 36 வயதுடைய இளைஞரும் 12 இலட்சம் பெறுமதியான ஐஸ்போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த இருவருக்கும் ஐஸ் போதைப் பொருளை விநியோகித்ததாக வவுனியா நகரப் பகுதியில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரும் மதவுவைத்த குளத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டதுடன், அவருடைய வீட்டில் இருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூவரையும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் கைதான நபர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(நி-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சு.வித்தியானந்தனின் சுவடுகள்

## பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது



பேராசிரியர் சு. வித்தியானந்தன் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிற்றும் ஆசிரியராக எமக்கு அறிமுகமானவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவரிடம் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் கற்ற மாணவர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. அவருடைய கற்பித்தல் திறன் மிகவும் சிறப்பானது. சுவையானது. பல்கலைக் கழக கலைமானிப் பட்டக் கற்கை நெறியிலே தமிழை ஒரு பாடமாகப் பயிலாத மாணவர்கள் கூட அவருடைய தமிழ் வகுப்புக்களிலே வந்து விரிவுரையைக் கேட்கும் வழக்கமும் எமது காலத்தில் இருந்தது.

பேராசிரியரிடம் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றவர்கள் பலர் உலகெங்கும் பரந்திருந்தார்கள். அவர்கள் தமிழ்மொழிப் பயிற்றலில் ஈடுபடாமல் வேறு துறைகளில் தம்மை இணைத்துக் கொண்டாலும் அவரிடம் கற்ற தமிழை நினைவில் நிறுத்தியே வாழ்வார். அவருடைய கற்பித்தல் அத்தகையது. இலக்கியத்தின் சுவையையும் இலக்கணத்தின் கட்டமைப்பையும் அவர் மாணவர் மனதில் பதிய வைக்கும் நிலை இன்றைய கல்வியாளரின் கோட்பாட்டுள் அடங்காத புதுமையான வழிப்படுத்தலாகும். கட்டுரையாளர் நான்கு ஆண்டுகளாக அவரிடம் சிறப்பு நிலையில் பயின்ற போது பெற்ற பட்டறிவு அது. தமிழிசைச் சிறப்பு நிலையிலே கற்றுப் பேராசிரியரிடம் பெற்ற தமிழறிவைப் பலருக்குப் பயிற்றும் மாணவர் தலைமுறையொன்றும் உருவாகியிருப்பதை இந்த நூற்றாண்டு நாள் மீள நினைக்க வைத்துள்ளது.

நாம் அவரிடம் கற்றபோது தமிழ் மொழி செம்மொழி என்ற சிறப்பை உலக அரங்கிலே பெற்றிருக்கவில்லை. ஆனால் இன்று தமிழ் ஒரு தொன்மையான மொழி, செவ்வியல் இலக்கியங்களைக் கொண்ட சிறப்பான மொழியெனப் பிற மொழியாளர்கள் குறிப்பிட்டுப் பேசும் போது உள்ளம் இறும்பூது எய்து நிற்கிறது. தமிழ் மொழியின் சிறப்பைப் பேராசிரியர் எழுதிய 'தமிழர் சால்பு' என்ற ஒற்றை நூலே இன்று உலகெங்கும் பரவச் செய்துள்ளது.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனது ஆசிரியர்கள் பயிற்றிய அரிய தமிழ் மொழியின் சிறப்பைத் தனது முனைவர் பட்ட ஆய்வின் மூலம் உலகறியச் செய்தார். அவரைப் பின்பற்றி அவரிடம் கற்ற மாணவர்களான பேராசிரியர் க.கைலாசபதியும், பேராசிரியர் கா.சிவத்தம்பியும் சங்க இலக்கிய முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டு தமது ஆசிரியரின் சுவடுகளில் நடந்து சென்றார்கள். உலக அரங்கிலே பேசப்படும் ஆய்வாளர்களாக வாழ்ந்து மறைந்தார்கள். அவர்கள் உடைய ஆய்வுகளும் நூல்களாகி இன்று தமிழ் மொழியில் ஒப்பாய்வுக் களத்திலே சிறப்பிடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் சுவடுகளில் நடந்த மாணவர்கள் பேராசிரியரைப் போலவே தமது சுவடுகளில் நடக்க மாணவர்களைப் பயிற்றினார்கள். பேராசிரியர் க.கைலாசபதியும் பேராசிரியர் சிவத்தம்பியும் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பணி செய்தது போலவே தமது சுவடுகளைப் பின்பற்ற மாணவர்களை அடையாளம் கண்டு வழிநடத்தினர். எனினும் சங்க இலக்கிய ஆய்வு என்ற நிலையில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ள ஓர் இருவரே முன்வந்தனர். அவர்களில் இருவருடைய ஆய்வு இன்று உலக அரங்கில் பேசப்படும் ஆய்வாக பின்பற்றப்படும் ஆய்வாக உள்ளது. ஒருவர் கட்டுரையாளராவர். மற்றவர் முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி முனைவர் அம்மன் கிளி முருகதாஸ் ஆவார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மாணவரான பேராசிரியர் கா.சிவத்தம்பியே இவ்விரு ஆய்வுகளுக்கும் மேற்பார்வையாளராக இருந்தார். இவ்விரு ஆய்வுகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு முனைவர் பட்டம் பெற்ற ஆய்வுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பல்முகப் புலமையில் சங்க இலக்கிய ஆய்வுகள் ஒரு தனியான தளமாகும். அந்தத் தளத்திலே இரு பெண்கள் முன்னோர் சுவடுகளில் தடம்பதித்து நிற்பது பலர் அறியாதது. ஏனெனில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மாணவப் பரம்பரை பற்றி பேசப்படும் போது பெண் மாணவிகள் பெயர் பெரும்பாலும் காற்றில் அடிபட்டுப் போய்விடுகிறது. மனோன்மணியின் பெயர் பேசப்பட்டாலும் அம்மன் கிளியின் பெயர் முற்றாக மறக்கும் நிலைக்கு வந்து விட்டது. ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தில் அம்மன்கிளியோடு ஒரே வகுப்பில் பயின்றவர். அவரையே இன்று பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மாணவர் வரிசையில் கடைசியில் வைத்து கூறப்படும் மரபு உருவாகி விட்டது. ஆனால் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு நாளில் பதிவு செய்யப்பட்ட ஒருவராக அம்மன் கிளியும் உள்ளார் என்பது அவர்களுக்கு நேரடியாக மூத்தவரான நான் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

உலகப் பொது நூல் என இன்று பலராலும் போற்றப்படும் திருக்குறளிலே வள்ளுவர் ஒரு குறளை வருமாறு அமைத்துள்ளார்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை"

இங்கு தம்மை விடப் பெரியவரை தமக்குச் சிறந்தவராகும் வண்ணம் அவர் வழி நடப்பதே வல்லமை எல்லாவற்றிலும் முதன்மையானது என வள்ளுவர் கூறிச் சென்றுள்ளார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் எனும் ஆசிரியரை எமக்குப் பெரியவராக வரித்து அவர் வழி நடந்து வந்தமையால் நாம் நல்ல வாழ்க்கையை வாழும் பேறு பெற்றோம். காலக்கடப்பில் அறுபது ஆண்டுகள் கரைந்து விட்டாலும் ஓர் ஆசிரியரின் சுவட்டில் நடந்து வந்த மகிழ்ச்சி மனநிறைவைத் தருகின்றது. ஒரு வலிமையைத் தருகின்றது. மாணவப் பருவம் கடந்து மானுடமாக வாழும் போது அன்றைய கற்பித்தல் இன்றும் தேவையானது என்பது நன்கு உணரப்படுகின்றது. தமிழர் சால்பை தமிழர் வாழும் இடமெல்லாம் பரப்ப பேராசிரியரின் "சுவடுகள்" மீள நினைவூட்டப்படவேண்டும். நூற்றாண்டு நாள் தொடக்கம் அந்த ஆண்டு நிறைவு வரை கொண்டாடப்பட்டு நமது அடுத்த தலைமுறைகளும் வளமாக வாழ நாமும் வாழும் வரை பணிசெய்ய வேண்டும்.

முனைவர்
ச.மனோன்மணி,
ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர்
கக்குசுயின் பல்கலைக்கழகம்,
ஜப்பான்.

# சா/த பரீட்சையில் முறைகேடு சி.ஐ.டியில் முறைப்பாடு

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள 2 பரீட்சை நிலையங்களிலும் ஹசலக்க பிரதேசத்தில் உள்ள ஒரு பரீட்சை நிலையத்திலும் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

தேர்வு எழுதியவர்கள் வழங்கப்பட்ட ஆங்கில வினாத்தாளை கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி படம் எடுத்து மற்ற தரப்பினருக்கு அனுப்பி விடைபெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.


குறித்த நேரத்தில் பரீட்சை நிலையங்களில் இருந்த அதிகாரிகள் கையடக்கத் தொலைபேசிகளைக் கைப்பற்றியுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர எம்மிடம் தெரிவித்துள்ளார்.

# ஐ.நாவின் பிரதிநிதிகள்-அநுர கொழும்பில் திடீர் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆன்ட்ரே பிராஞ்ச் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றுள்ளது.



குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றதாக அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பு தொடர்பில் அநுர வெளியிட்ட முகநூல் பதிவில், குறித்த சந்திப்பின் போது இலங்கையின் நடப்பு மனித உரிமைகளின் நிலைமை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயன்முறை பற்றி இரு தரப்புக்கும் இடையில் விரிவாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

குறிப்பாக இலங்கையில் நல்லிணக்க செயன்முறையை உன்னிப்பாக அவதானிப்பதாக சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் எதிர் வரும் தேர்தல் செயன்முறைக்குள் அரசியல் கட்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தினர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்வாய்...

(வயது- 68) என்பவரே உயிரிழந்தவரா வார்.

மகன் மற்றும் மனைவியை பிரிந்து சகோதரங்களுடன் வசித்து வந்த நிலை யில் வீட்டில் யாரும் இல்லாத நிலை யில் அவர் வீட்டின் வெளிப்பகுதியில் இறந்த நிலையில் சடலமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று வெள்ளிக் கிழமை பருத்தித்துறை ஆதார வைத் தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபை வாசுதேவா பிரேத பரி சோதனையை மேற்கொண்டார்.

இதன்போது கடும் வெப்பம் காரண மாக உயிரிழப்பு இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிட்டுள்ளார். (ம-7,10,60)

## வவுனியாவில்...

யாளர் ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள் ளார்.

வவுனியா தெற்கு வலயத்திற்குட் பட்ட பாடசாலை ஒன்றில் க.பொத. சாதா ரணதரப் பரீட்சையின் முதல் நாள் சமய பாட பரீட்சையின்போது பரீட்சை நிறைவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் பரீட்சை நிலையம் ஒன்றில் உள்ள மாணவர்கள் சிலரிடம் விடைத் தாள்கள் பெறப்பட்டதாக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனைக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வலயக்கல்விப் பணிமனை குறித்த பரீட்சை நிலையத் தில் மேற்பார்வையாளராக கடமையாற் றிய வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் ஒருவரை இடை நிறுத்தியுள்ளது. (ம-7,10)

## வெளிநாட்டு...

நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

சட்டவிரோதமாக வெளிநாடு களுக்கு தொழில் வாய்ப்புக்காக செல்ல வேண்டாம்.

தொழில் நிமிர்த்தம் சென்றால் பல் வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரி டும் எனவும் அமைச்சர் மனுஷ நாண யக்கார குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## பரீட்சை...

பரீட்சை நிலையத்தில் க.பொ.த சாதா ரண தர பரீட்சை இடம்பெற்றது. இந் நிலையில் அங்கு பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பாடத்தின் ஒருபகுதி நிறைவுற்றதுடன் நீண்டநேரம் இடை வேளை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பரீட்சை மண்டபத் திற்கு வெளியில் ஒன்றுகூடிய இரு பாடசாலைகளை சேர்ந்த ஆண் மாண வர்கள் தங்களுக்குள் கடுமையாக மோதிக்கொண்டனர்.

இதனால் குறித்த பகுதியில் சற்று நேரம் குழப்பம் நீடித்ததுடன் போக்கு வரத்தும் தடைப்பட்டது.

இதனையடுத்து வீதியால் செல்பவர் கள் அங்கு ஒன்றுகூடியமையால் குறித்த மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ம-7,10,250)

## உரிய தீர்வு...

விஜேரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களின் பிரச் சினைகளைத் தீர்க்க வேண்டிய எண் ணம் அரசாங்கத்துக்கு இல்லை என வும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்ப தற்கு தங்களது தரப்பினர் தீர்மானித் துள்ளதாகவும் இலங்கை கிராம உத்தி யோகத்தர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரி வித்துள்ளார். (ம-7,10)

## துணியினால்...

வீட்டில் உள்ள கழிவறைக்கு அரு காமையில் உள்ள நீர் நிரம்பிய பரலில் குப்புற விழுந்த நிலையில் அதிகாலை 5.30 மணியளவில் அவர் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபை வாசுதேவா

பிரேத பரிசோதனையை மேற்கொண்டார்.

இதன்போது கழுத்தில் துணி போட்டு நெரிக்கப்பட்டு கொலை செய்ததற்கான அடையாளங்களும் தொடைப்பகுதி யில் கீறல் காயங்களும் காணப்பட்டுள்ள தாக மருதங்கேணிப் பொலிஸாருக்கு அவர் அறிக்கையிட்டுள்ளார். (ம-7,10,60)

## சிறந்த ஆட்சி...

கூறுக்கள் என்பன அண்மையில் வெளியிடப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் சில தினங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர கத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இருதரப்புத் தொடர்புகள், கடன்மறுசீரமைப்பு மற் றும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்புக்கள் என்பன பற்றி விரிவாகக் கலந் துரையாடப்பட் டுள்ளது.

இதுகுறித்துத் தனது உத்தி யோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத் தூது வர் ஜூலி சங், அதில் இலங்கை யில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு வதற்கு அமெ ரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் நிலையில், சிறந்த ஆட்சி நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகிய வற்றின் அவசி யம் குறித்து தான் மத்திய வங்கி ஆளுநரிடம் வலி யுறுத்தியதாகத் தெரிவித்துள் ளார். (ம-7,10)

## புன்...

றம் சுமத்தினர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவி லுள்ள பிள்ளை யார் கோவிலுக்கு அருகில் இந்த விபத்து நேற்று இரவு இடம்பெற் றுள்ளது.

இதில் கோப் பாய் தெற்கைச் சேர்ந்த செல்வ நாயகம் பிரதீபன் (வயது-41) என்ப வரே உயிரிழந்த வராவார்.

பலாலிபொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தி யோகத்தர்கள் மோட்டார் சைக் கிளில் சென்ற நபரை மறித்துள் ளனர்.

இதன்போது குறித்த நபர் தொடர்ந்து பயணிக்கவே விரட்டி சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த நபர் பயணித்த மோட்டார் வண்டியை உதைத்து விழுத்தியதில் குறித்த நபர் மின்கம்பத்தில் மோதி உயிரிழந்தார் என பொதுமக்கள் குற்றஞ் சாட்டினர்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,10,33)

## பசு வதை...

தெரிவித்து இந்து அமைப்புகளின் பங்களிப்புடன் போராட்டம் ஒன்று நாளை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முன்றலில் இடம்பெறவுள்ளது.

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலை மையில் இப்போராட்டம் இடம்பெற வுள்ளது. (ம-7,10)

### மஹஜன சம்பத

திகதி 2024.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 5471
E 6 2 1 7 6 0

அத சம்பத: E 1 7 6 0
சீட்டிழுப்பு இலக்கம் 46

### மெகா பவர்

திகதி 2024.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 1819
Y 17 07 46 56 78
58885 — 286748

| | | | | |
|---|---|---|---|---|
| 0374425 | 1263602 | 0580568 | 0486384 | 0404692 |
| 0090778 | 0496429 | 1000020 | 1382487 | 0536608 |

### தன நிதானய

திகதி -2024.05.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1501
V 16 69 74 75 V
Double Chance 25213

### லக்கி 7 VIP

திகதி 2024.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 0297
V 8 0 6 4 0 4 V

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3713
சீட்டிழுப்பு திகதி 10.05.2024
W 62 69 72 79
W 03738

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 0780
மேஷம் 03 26 33 48 மேஷம்
53294 — 16

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2445 — சீட்டிழுப்பு திகதி 10.05.2024 — தினம் வெள்ளி
வெற்றி இலக்கங்கள் 06 27 29 42 V
83791
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,671,056.00

### உத்தியோகபூர்வ முடிவுகள்

10.05.2024 — வெற்றி வாரம் 179
C 2 5 1 2 2 2
99393 R
அடுத்த சுப்பர் ஜக்பொட ரூ.22,021,284.00

### சனிதா

திகதி 2024.05.10 — வெற்றி வாரம் 4608 — வர்ணம் செம்மஞ்சள்
13 19 50 52 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,399,132.40
01865

### சசிரி

வெற்றி வாரம் 475 — சீட்டிழுப்பு திகதி 2024.05.10 — பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 | 08 | 45
06
61527
ரூ 2,689,720/-

### ரூசி

சீட்டிழுப்பு வாரம் 4157 — வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.10 — தினம் வெள்ளிக்கிழமை
03 10 27 29 — தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,338,920.80
845454

### வஜ்ர

X 16 05 23 47 60
1621 — 10.05.2024 வெள்ளி
789702
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 521,906,811.00

### அத கோடிபதி

வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம்: 2271 — சீட்டிழுப்பு திகதி: 2024.05.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 112,089,464.80
12 28 50 72 G
540908

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அரியதோர் வாய்ப்பு

தரம் 10, O/L, A/L படித்த இளைஞர் யுவதிகளினை எமது கிளை நிறுவனங்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இணைக்கவுள்ளோம்.

மாதாந்தம் 45,000 ரூபாவிற்கு மேற்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியும் தங்குமிடம், உணவு ஒழுங்குபடுத்தி தரப்படும். நீங்கள் எமது நிறுவனத்துடன் இணைய எமது கிளை நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றவும்.

தொடர்புகளுக்கு : (720,724)

**076 774 3440, 074 143 3505**

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அலுவலகங்களுக்கு ஏற்றவாறு 1 ஆம், 2 ஆம் மாடி 4000 சதுர அடி கொண்ட மேல் மாடி வாடகைக்கு உண்டு. (C-0333)

**076 315 6470**

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும்(Hoist) இப்பொழுது எம்மிடம்.

**(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)**

**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**



**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917 (716)


## இந்தியா...

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்து ரையாடினார்.

இது தொடர்பில் இலங்கைக்கான இந் திய உயர்ஸ்தானிகராலயம் தமது X பக்கத்தில் இவ் விடயத்தை தெரிவித்துள்ளது. அதில் இலங்கையின் தற்கால அரசியல் நிலைவரம், வடக்கு, கிழக்கு அடங்கலாக இலங்கையில் இந்தியா முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்களை மையப்படுத்திய விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7.10)


## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு குளப்பிட்டி லேன் காளி கோவிலடி பகுதியில் மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. படிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். (C-0329)

**076 262 5204**

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111** (511)

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.

## இங்கிலண்ட் கட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இங்கிலண்ட் கட்டர் (36") விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (இ)

**076 097 3121**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை. (697)

**077 88 62 927**

## TECHNO WORLD

## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L தொழில்நுட்ப பிரிவு**


**புதிய பிரிவு A/L 2026**

திகதி : 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 8.30

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஒரே ஒரு கல்வி நிறுவனம்** (C-0331)

தொடர்புகளுக்கு : **077 017 5346**


## மரண அறிவித்தல்



தோற்றம்
1954 . 03 . 31

மறைவு
2024 . 05 . 09

### திரு.அண்ணாமலை சந்திரன் (ஆனந்தன்)

கூழாவடி ஒழுங்கை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அண்ணாமலை சந்திரன் அவர்கள் கடந்த வியாழக்கிழமை (09.05.2024) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - பவளம் தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் சோதி தம்பதியினரின் மூத்த மருமகனும் சிவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் உதயராஜன், இந்துகா(கனடா), சாரங்கன்(பிரான்ஸ்), சஞ்சீபன்(பிரான்ஸ்), சுபனேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் லிலோஜினி, துஷியந்தன்(கனடா), கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும் கெவிக்சான், ஜெய்சான்(கனடா), ஜொனவின்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (13.05.2024) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (712)

இல.15,
கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

077 585 2205 (மனைவி)
070 779 9979 (உதயன் - மகன்)
337 6763 2698 (சாரங்கன்(மகன்) - பிரான்ஸ்)

*இங்ஙனம்:*
குடும்பத்தினர்


## உடனடி வேலை வாய்ப்புக்கள்



**EXECUTIVE OFFICER**

- ✔ சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✔ வயது-22 தொடக்கம் 35
- ✔ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0334)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## V2 VISA SERVICES

## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0334)

## பதவி வெற்றிடம்

யாழ் பிராந்தியக் கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தில் நேரக்கணிப்பாளராகக் கடமையாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் எதிர்வரும் 20.05.2024ம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும், மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உள்ளன என்பதுடன் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு அருகிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

முகவரி : **இல. 260/22, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**


தொ.இல : **021 222 6924** (717)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 180/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 200 | |
| 1 Kg திட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 1 Lux சோப் றோஸ் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 400g Anlene அன்லீன் | - 1259/= | ~~1350/=~~ |

**400g Anchor**

995/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (723)

Happy Supermarket
**0777 8080 30**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org